THE SUDAR OLI

# சுடர் ஒளி

Registered as Newspaper

தொடர்புக்கு 076 584 2222

09.04.2020 வியாழக்கிழமை

## 3 பேர் குணமடைவு! 47 பேர் வீட்டுக்கு!!

கொழும்பு, ஏப்.9
இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளான மேலும் 03 பேர் இன்று குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர். அதற்கமைய, கொரோனா வைரஸ் தொற்றுக்குள்

2

## இம்மாத இறுதிக்குள் கொரோனா அடங்கும்

கொழும்பு, ஏப். 9
சுகாதாரத் தரப்பினர் வழங்கும் ஆலோசனைகளின்படி பொது மக்கள் செயற்படுவார்களாயின், இம்மாத இறுதிக்குள் கொரோனாப் பரவலை முற்றாகத் தடுக்கலாம்.

2




வுகான், ஏப். 9
கொரோனா வைரஸால் உலக அளவில் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 15 லட்சத்து 50 ஆயிரமாக அதிகரித்தது. உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 90 ஆயிரமானது. சீனாவில் கடந்த மாதம் இறுதிப் பகுதியில் கொரோனா வைரஸ் அவதானிக்கப்பட்டது. இந்த வைரஸ் தற்போது உலகின்

2



## முல்லைத்தீவில் கொரோனா தொற்றா? மூவருக்கு பரிசோதனை

முல்லைத்தீவு, ஏப்.9
முல்லைத்தீவு மாவட்டத்தில் கொரோனாத் தொற்றுச் சந்தேகத்தில் மூவரின் மாதிரிகள் பரிசோதனைக்காக யாழ்ப்பாணம் எடுத்து வரப்பட்டுள்ளன. யாழ்ப்பாணம் அரியாலையில் நடைபெற்ற

2

## மதில் வீழ்ந்ததில் இளைஞன் சாவு

முல்லைத்தீவு, ஏப். 9
மதில் ஒன்றில் ஏறிய இளைஞர் , திடீரென மதில் அவர் மீது வீழ்ந்ததால், அதற்குள் அகப்பட்டு உயிரிழந்தார் . இந்தச் சம்பவம் முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட தேவிபுரம் பகுதியிலுள்ள தனியார் பால் கொள்வனவு நிலையத்தில் நேற்றிரவு இடம்பெற்றது.

2

## தன்னார்வக் கொடையாளிகளால் 59 மில்லியனுக்கு

# 64 ஆயிரம் குடும்பங்களுக்கு யாழில் உதவி

யாழ்ப்பாணம், ஏப். 9
தொடர் ஊரடங்கு காரணமாக அன்றாடத் தொழில் செய்வோர் உட்பட பாதிக்கப்பட்ட யாழ்ப்பாணக் குடாநாட்டு மக்களுக்கு அரசின் நிவாரணம் எதுவும் கிடைக்கப்பெறாத நிலையில், பல்வேறு தன்னார்வக் கொடையாளிகளால் 59 மில்லியன் ரூபாவில் 64 ஆயிரம் குடும்பங்களுக்கு உதவிப் பொருள்கள் வழங்கப்பட்டுள்ளன.

2

## மன்னார் தாராபுரத்தில் ஒரு நோயாளியால் 1616 பேர் தனிமையில்

மன்னார், ஏப். 9
மன்னார் தாராபுரம் கிராமத்தில் கொரோனா சந்தேகம் ஆயிரத்து 616 பேர் தனிமைப் படுத்தப்பட்டுள்ளனர் என்று மாவட்டச் செயலக அதிகாரி தெரிவித்தார்.

2

## மின் கட்டணம் செலுத்துவதற்கு சலுகைக் காலம் நீடிப்பு

*அமைச்சர் அறிவிப்பு*

கொழும்பு, ஏப். 9
மின்சாரக் கட்டணத்தைச் செலுத்துவதற்காக வழங்கப்பட்ட சலுகைக் காலம் எதிர்வரும் 30ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளதாக மின்சக்தி அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார். நாட்டின் தற்போதைய நிலையைக் கருத்திற்கொண்டு இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக

2

## உரிய நேரத்தில் மருத்துவமனை செல்லாததால் மூவர் உயிரிழப்பு

*யாழ்ப்பாணத்தில் சோகம்*

யாழ்ப்பாணம், ஏப். 9
கொரோனா அச்சம் காரணமாக உரிய நேரத்தில் மருத்துவமனைக்கு கொண்டு வரப்படாமையால் மூன்று பேர் உயிரிழந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் கடந்த ஒரு வாரத்தினுள் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றுள்ளதாக வடக்கு மாகாண ஆளுநர் தலைமையில் இன்று காலை இடம்பெற்ற கலந்துரையாடலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2

## கொரோனாவை அறிய 'செயலி' அறிமுகம்

கொழும்பு,ஏப்.9
சுகாதார மற்றும் சுதேச வைத்திய சேவைகள் அமைச்சு, தகவல் தொழில்நுட்ப மற்றும் தொடர்பாடல் நிறுவனத்துடன் இணைந்து 'MY HEALTH SRILANKA' என்ற ஒரு புதிய ஸ்மார்ட் கைத்தொலைபேசி செயலியை அறிமுகப்படுத்தியுள்ளது.

2



## 22 மில். யூரோ நன்கொடை

*இலங்கைக்கு வழங்கியது ஐரோப்பிய ஒன்றியம்*

கொழும்பு,ஏப்.9
இலங்கையில் கொவிட் 19 என அழைக்கப்படும் கொரோனா வைரஸ் தொற்றை இல்லாதொழிக்க ஐரோப்பிய ஒன்றியம் 22 மில்லியன் யூரோவை நன்கொடையாக வழங்கியுள்ளது. இலங்கையில் கொரோனாத் தொற்றுக்குள்ளானவர்கள் நாளுக்குநாள் அதிகரித்துச் செல்லும் வேளையில் கொரோனா வைரஸை இல்லா தொழிப்பதற்காக ஐரோப்பிய ஒன்றியம் 22

2

# 64 ஆயிரம் குடும்பங்களுக்கு...

யாழ்ப்பாண மாவட்டத்தில் கடந்த 24 ஆம் திகதி மதியம் 2 மணியின் பின்னர் ஊடரங்குச் சட்டம் தளர்த்தப்படவில்லை.
அன்றாடத் தொழில் செய்வோர் மிகப் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளனர். வறுமைக் கோட்டுக்கு உட்பட்டோரும் பாதிப்புக்களை எதிர்கொண்டுள்ளனர். பல்வேறு வழிகளிலும் இடர்பட்டுள்ள மக்களுக்கு அரசின் நிவாரணங்கள் வழங்கப்படவில்லை.
ஆனாலும் பல்வேறு தன்னார்வக் கொடையாளிகள் தங்களால் முடிந்த உதவிகளை வழங்கியுள்ளனர். இதுவரையும் யாழ்ப்பாண மாவட்டச் செயலகம் ஊடாக 15 கொடையாளிகளும், பிரதேச செயலகங்கள் ஊடாக 250 கொடையாளிகளும் இந்த உதவிகளை வழங்கியுள்ளனர். இவர்கள் 59 மில்லியன் ரூபா பெறுமதியான பொருள்களை வழங்கி வைத்துள்ளனர்.
யாழ்ப்பாண மாவட்டத்தின் மொத்தச் சனத் தொகையின் அரைவாசியான 64 ஆயிரம் குடும்பங்களுக்கு இந்த உதவிப் பொருள்கள் இதுவரை பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன. (ஒ,5)

# 3 பேர் குணமடைவு!

ளாகி குணமடைந்தவர்களின் எண்ணிக்கை, 44 இலிருந்து 47 ஆக உயர்வடைந்துள்ளது.
தேசிய தொற்றுநோய் விஞ்ஞானப் பிரிவினால் இன்று எடுக்கப்பட்ட கணக்கெடுப்பின்படி கொரோனா வைரஸ் தொற்றியவர்களின் எண்ணிக்கை 189 ஆகக் காணப்படுகின்றது. புதிதாக எவரும் இன்று அடையாளம் காணப்படவில்லை. அதற்கமைய, பாதிக்கப்பட்ட 189 பேரில் தற்போது 135 நோயாளிகள் சிகிச்சை பெற்று வருகின்றனர். 7 பேர் உயிரிழந்துள்ளனர். இதனிடையே வைத்தியசாலைகளில் தற்போது 242 பேர் கொரோனா தொற்று தொடர்பில் கண்காணிக்கப்பட்டு வருகின்றனர் என்று சுகாதார மேம்பாட்டு பணியகம் அறிவித்துள்ளது. (ப-22)

# இம்மாத இறுதிக்குள்


அத்துடன் பிரதேச ரீதியில் தனிமைப்படுத்தல் நிலையங்களை உருவாக்குமாறு ஆலோசனையும் அரசுக்கு வழங்கியுள்ளோம் என இலங்கைப் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.
சுய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தும் போது, அதற்கான வசதிகள் சில வீடுகளில் இல்லாதுள்ளதால், அந்த வீடுகளிலுள்ள ஏனையோருக்கும் சிக்கல் ஏற்படுவதற்கான வாய்ப்புள்ளது என்று, இலங்கைப் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.
பிரதேச ரீதியில் தனிமைப்படுத்தல் நிலையங்களை உருவாக்குமாறு ஆலோசனை வழங்கியுள்ள அந்தச் சங்கம், இதனூடாக, வீடுகளிலுள்ள ஏனையவர்களுக்கும் தொற்று ஏற்படுவதைத் தவிர்க்க முடியும்.
சுகாதாரத் தரப்பினர் வழங்கும் ஆலோசனைகளின்படி பொதுமக்கள் செயற்படுவார்களாயின், இம்மாத இறுதிக்குள் கொரோனாப் பரவலை முற்றாகத் தடுக்கலாம் என்றும், பொதுச் சுகாதார அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது. (ஒ,5)

# ஒரு நோயாளியால் 1616 பேர்

மன்னாரில் தாராபுரத்தில் இறப்பு வீட்டுக்குச் சென்றவருக்கு கொரோனா தொற்று இருப்பது உறுதியான நிலையில், அந்தப் பகுதியிலும் தொற்று உள்ளதா எனக் கண்டறிவதற்காகவும், முன்னெச்சரிக்கையாகவுமே அவர்களும் அந்தப் பகுதியும் தனிமைப்படுத்தப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது. தனிமைப்படுத்தல் பிரதேசத்தில் இரு கிராம அலுவலர் பிரிவுகள் உள்ளடங்குகின்றன. இதில் தாராபுரம் மேற்கில் 224 குடும்பங்கங்களைச் சேர்ந்த 864 பேரும், தாராபுரம் கிழக்கில் 196 குடும்பங்களைச் சேர்ந்த 752 பேருமாக மொத்தம் 420 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 616 பேர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். இவர்களில் சமுர்த்தி உட்பட உதவி உள்ளவர்களுக்கு ஏற்கனவே வழங்கப்பட்ட நிலையில், அவர்கள் தற்போது பணத்தை செலுத்தி பொருள்களைப் பெற்றுக்கொள்ளும் சந்தர்ப்பம் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (த-105)

# முல்லைத்தீவில் கொரோனா தொற்றா?

ஆராதனையில் கலந்து கொண்ட முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த மூவரும் , கொரோனா தொற்று உள்ளவருடன் பழகினர் என்ற காரணத்தால் வீடுகளில் தனிமைப்படுத்தப்பட்டனர்.
இந்த நிலையில் இவர்கள் மூவரிடமிருந்தும் பரிசோதனைக்காக இன்று காலை மாதிரிகள் எடுக்கப்பட்டுள்ளன.
புதுக்குடியிருப்பில் அமைந்துள்ள சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனைக்கு யாழ்ப்பாணத்தில் இருந்து வருகைதந்த மருத்துவர்களால் இந்த மாதிரிகள் எடுக்கப்பட்டு பரிசோதனைக்காக யாழ்ப்பாணம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என்று பிராந்திய சுகாதார பணிப்பாளர் எஸ்.சுகந்தன் தெரிவித்தார். (ஐ-19)




200க்கும் மேற்பட்ட நாடுகளில் பரவியுள்ளது. அமெரிக்காவில் மட்டும் சுமார் 4 லட்சத்து 50 ஆயிரம் பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். சுமார் 15 ஆயிரம் பேர் உயிரிழந்தனர். இந்த நிலையில் உலக அளவில் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை எண்ணிக்கை 15 லட்சத்து 50 ஆயிரமாக அதிகரித்தது. உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 90 ஆயிரமானது. (ம)

# மதில் வீழ்ந்ததில்

புளியங்குளம் ஒட்டுசுட்டான் பகுதியைச் சேர்ந்த சௌந்தராயன் சயந்தன் (வயது 23) என்பவரே உயிரிழந்துள்ளார். இவர் அங்கு அங்கு பால் கொள்வனவாளராகப் பணிபுரிந்து வரும் நிலையில் சம்பவம் இடம்பெற்றது. சம்பவம் தொடர்பில் புதுக்குடியிருப்புப் பொலிஸார் விசாரணை நடத்தினர். மருத்துவமனையில் உடற்கூற்றுப் பரிசோதனையின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்படும் என்று பொலிஸார் தெரிவித்தனர். (த-19)

# உரிய நேரத்தில் மருத்துவமனை

யாழ்ப்பாண மாவட்டத்தின் தற்போதைய நிலைவரம் தொடர்பில் வடக்கு மாகாண ஆளுநர் திருமதி சாள்ஸ் தலைமையில் இன்று காலை ஆளுநர் அலுவலகத்தில் சிறப்புக் கலந்துரையாடல் இடம்பெற்றது. 1990 இலக்க அம்புலன்ஸ் சேவை தொடர்பிலும் ஆராயப்பட்டது. இதன்போது, யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் கொரோனா தொற்றாளர்கள் சேர்க்கப்படுகின்றனர், அவர்களுக்குச் சிகிச்சையளிக்கப்படுகின்றது என்றவாறான தகவல் மக்கள் மத்தியில் உள்ளது. அதனால் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்குச் சென்றால் தமக்கும் கொரோனா தொற்றி விடும் என்ற அச்சத்தால் மருத்துவமனைக்கு வருவதற்குப் பலர் பயப்படுகின்றார்கள்.
இந்த நிலையில் உரிய நேரத்துக்கு மருத்துவமனையை நாடாததால் மூன்று பேர் உயிரிழந்துள்ளனர். அவர்கள் உரிய நேரத்துக்கு மருத்துவமனைக்கு அழைத்து வரப்பட்டிருந்தால் உயிரிழப்பை தடுத்திருக்க முடியும். யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் கொரோனா விடுதி தனியாகச் செயற்படுகின்றது என்ற தகவலை மக்களிடத்தில் உரிய முறையில் கொண்டு சென்று சேர்க்கவேண்டும் என்று இதன்போது கூறப்பட்டுள்ளது. எந்தவொரு நோயாக இருந்தாலும் அருகிலுள்ள மருத்துவமனையையாவது உடனடியாக பொதுமக்கள் நாட வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ஒ,5)

# மின் கட்டணம் செலுத்த....

சுட்டிக்காட்டியுள்ளார். கொரோனா வைரஸ் தொற்று நாட்டில் முழுமையாக கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரப்பட்டதன் பின்னர் தவணை முறையில் மின்சாரக் கட்டணத்தைச் செலுத்துவதற்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும் எனவும் குறிப்பிட்டுள்ளார். மின்சாரக் கட்டணங்கள் மிகுதியின்றி முற்றாக செலுத்தப்படும் வரை தொடர்ந்தும் மின்சாரம் வழங்கப்படும் எனவும் மின்சக்தி அமைச்சர் மஹிந்த அமரவீர மேலும் தெரிவித்துள்ளார். (ஒ,5)



# 22 மில். யூரோ நன்கொடை...

யூரோவை நன்கொடையாக வழங்கியுள்ளது என்று அரச தகவல்கள் தெரிவிக்கின்றன. இதேவேளை, அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் ஏற்பட்டுள்ள கொரோனா வைரஸ் ஒழிப்பு நடவடிக்கைகளுக்காக, 4 கோடியே 44 இலட்சம் அமெரிக்க டொலர் நிதி ஒதுக்கீட்டுக்கான அனுமதியை ஆசிய அபிவிருத்தி வங்கி வழங்கியுள்ளது. இலங்கை உட்பட அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளுக்கு இந்த நிதி செலவிடப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ப-22)

# கொரோனாவை அறிய....

இந்தச் செயலி மூலம் தீவிரமாகப் பரவி வரும் கொரோனா கொவிட் 19 தொடர்பான தற்போதைய நிலை மற்றும் ஒன்லைன் வைத்திய ஆலோசனை போன்ற பல விடயங்கள் கொண்டுள்ளன.
நாட்டில் தற்போதுள்ள இடர் நிலையைக் கருத்தில் கொண்டு இந்தச் சேவையைச் செயற்படுத்தி, பயன்படுத்திக் கொள்ளுமாறு மக்களுக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-114)

# சடலம் மீட்பு

கொழும்பு, ஏப். 9

கொழும்பு மவுண்ட் லவனியாவில் உள்ள ஒரு உணவகத்தின் கார் தரிப்பிடத்தில் அடையாளம் தெரியாத நபரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

மவுண்ட் லவனியா பொலிஸாருக்கு நேற்று கிடைத்த தகவலின்படி, செரம் வீதியில் உள்ள ஒரு உணவகத்தின் கார் தரிப்பிடத்தில் சடலம் மீட்கப்பட்டுள்ளது. சில நாள்களுக்கு முன்பு அவர் இறந்திருக்கலாமென நம்பப்படுகிறது. இதுவரை இறந்தவர் யாரென்று உறுதி செய்யப்படவில்லை. மவுண்ட் லவனியா நீதி மன்ற உத்தரவின் பேரில் சர்வதேச தனிமைப்படுத்தல் விதிமுறைகளின்படி, களுபோவில மருத்துவமனையின் பிரேத அறையில் உடல் வைக்கப்பட்டுள்ளது. (ஒ,5)



# சமூக இடைவெளி சிறப்பு

முல்லைத்தீவு, ஏப்.9

இன்று ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்பட்டுள்ள நிலையில் முல்லைத்தீவு மாவட்ட மக்கள் வணிக நிலையங்கள் மற்றும் சந்தைகளில் சமூக இடைவெளியை சிறந்த முறையில் கடைப்பிடித்து வருவதைக் காணக்கூடியதாகவுள்ளது.

முல்லைத்தீவு நகரம், முள்ளியவளை, புதுக்குடியிருப்பு போன்ற நகரப்பகுதிகளில் உள்ள சதோசா விற்பனை நிலையம் மற்றும் வணிக நிலையங்கள், பொது சந்தைகளில் சமூக இடைவெளியைக் கடைப்பிடித்து மக்கள் பொருள் கொள்வனவில் ஈடுபட்டனர். அத்துடன் மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் பொலிஸார் அறிவிப்புக்களையும் வழங்கி வருகின்றனர்.(ஐ-19)



# ஊரடங்கால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிகள்

திருகோணமலை, ஏப்.9

திருகோணமலை மூதூர் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட பகுதிகளைச் சேர்ந்த ஊரடங்கால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உலர் உணவுப் பொதிகள் வழங்கப்படவுள்ளன. இதற்கென ஆயிரத்து 300 ரூபா பெறுமதியான 750 பொதிகள் மூதூர் பிரதேச செயலகத்தில் நேற்று பாரப்படுத்தப்பட்டன.

கிழக்கு மாகாண ஆளுநரின் பணிப்புரையின் பேரில் திருகோணமலை மாவட்டச் செயலரின் எழுத்துமூல வேண்டுகோளுக்கு அமைய வேள்ட் விசன் நிறுவனத்தினரால் இந்த உதவிகள் வழங்கப்பட்டன. (ஐ-40)



# வவுனியாவில் சன நடமாட்டம் குறைவு

வவுனியா,ஏப்.9

நாட்டில் ஏற்பட்டுள்ள கொரோனாத் தொற்றையடுத்து அமுல்படுத்தப்பட்டிருந்த ஊரடங்குச் சட்டம், வவுனியா மாவட்டத்தில் 10 மணிநேரம் இன்று தளர்த்தப்பட்ட நிலையில், அத்தியாவசியப் பொருள்களைக் கொள்வனவு செய்வதற்காக வர்த்தக நிலையங்களுக்கு வருகை தந்த மக்களின் எண்ணிக்கை குறைந்த அளவிலேயே காணப்பட்டது.

அத்தியாவசிப் பொருள்கள், மருந்துப் பொருள்கள், மரக்கறிகள் என்பவற்றைக் கொள்வனவு செய்வதற்காகவும், வங்கிகளில் பணம் பெறுவதற்காகவும் மக்கள் நகருக்கு வருகை தந்தனர். மரக்கறி வியாபாரத்துக்காக வவுனியா மன்னார் வீதியில் காமினி மகா வித்தியாலய மைதானத்தில் நகர சபையினரால் இடம் ஒதுக்கி வழங்கப்பட்டு, நகரப்பகுதியில் பொதுமக்களின் நடமாட்டம் குறைக்கப்பட்டுள்ளது. வவுனியா பஜார் வீதி, மீன் சந்தை, மரக்கறி சந்தை ஆகிய பகுதிகளுக்காக வீதியூடாக வாகனங்கள் செல்வதற்கும் பொலிஸாரால் தடை விதிக்கப்பட்டு வீதிகள் மூடப்பட்டிருந்தன. வவுனியா நகரில் வங்கிகள் , விவசாயத் திணைக்களம், பலசரக்கு விற்பனை நிலையங்கள், மரக்கறி விற்பனை நிலையங்கள், மருந்தகம், எரிபொருள் நிரப்பு நிலையம் என்பன மாத்திரமே திறப்பட்டிருந்தன. ஏனைய வர்த்தக நிலையங்கள் மூடப்பட்டிருந்தன.(க-18)



# 100 குடும்பங்களுக்கு இடர் நிவாரணம்

கிளிநொச்சி, ஏப்.9

கிளிநொச்சி , கோணாவில், செல்வா நகர், கிருஸ்ணபுரம் பகுதிகளில் 100 குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன.

யாழ்.போதனா வைத்தியசாலைப் பணிப்பாளரும், கல்வி வளர்ச்சி அறக்கட்டளைத் தலைவருமான வைத்தியர் த.சத்தியமூர்த்தியின் ஒழுங்குபடுத்தலில், எதிர்காலத்துக்கான பாதை அமைப்பினரின் நிதி அனுசரணையில் கிளிநொச்சி நகர றோட்டரிக் கழகத்தினரின் நெறிப்படுத்தலில் தலா இரண்டாயிரம் ரூபா பெறுமதியான பொருள்கள் இந்த 100 குடும்பங்களுக்கும் நேற்று வழங்கப்பட்டன. (க-222)



# 200 மாணவர்களுக்கு உணவுப் பொதிகள்

யாழ்ப்பாணம், ஏப்.9

யாழ்ப்பாணம், வைத்தீஸ்வராக் கல்லூரியைச் சேர்ந்த தெரிவு செய்யப்பட்ட 200 மாணவர்களுக்கு தலா 2 ஆயிரத்து 500 ரூபா பெறுமதியான உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன.

இதற்கான நிதியுதவி புலம்பெயர் நாட்டில் உள்ள கல்லூரியின் பழைய மாணவர்களால் வழங்கப்பட்டது.

இந்த உலர் உணவுப் பொருள்கள் மாணவர்களது வீடுகளுக்குச் சென்று நேரடியாக வழங்கப்பட்டன.(ஐ-63)

# நாட்டை ஆள்வது இராணுவமா?

## தயாசிறி ஜயசேகர போர்க்கொடி

கொழும்பு, ஏப்.9

நாட்டை ஆள்வதற்கு இராணுவம் போதும் என்ற கருத்தை ஏற்கமுடியாது. ஜனநாயகம் வலுப்பெறவேண்டுமெனில் நாடாளுமன்றக் கட்டமைப்பு இருக்க வேண்டும். பொதுத் தேர்தல் நடத்தப்படவேண்டும் என்று ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் பொதுச்செயலாளர் தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.

கொரோனா விவகாரம் உட்பட சமகால நிலவரம் தொடர்பில் முகநூல் வாயிலாக இடம்பெற்ற நேரலையில் கலந்து கொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது,

கொரோனா வைரஸ் பரவுவதைக் கட்டுப்படுத்தி மக்களைப் பாதுகாப்பதற்காக அரசாங்கம் துரிதமாகச் செயற்பட்டுள்ளது என்றே கூறவேண்டும். ஜனாதிபதி, பிரதமர் உள்ளிட்ட அரச கட்டமைப்புக்கு முதலில் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன். ஏனைய நாடுகளுடன் ஒப்பிடுகையில் அனர்த்த முகாமைத்துவம் என்பது இங்கு சிறந்த மட்டத்தில் உள்ளது.

கொரோனாவின் சவாலை எதிர்கொள்வதற்கு 20 க்கும் மேற்பட்ட வைத்தியசாலைகள் தயார் நிலையில் உள்ளன. 11 வைத்தியசாலைகளில் பீ.சீ.ஆர். பரிசோதனையை மேற்கொள்வதற்கான வசதி இருக்கின்றது. 2 ஆயிரம் பேருக்கு எந்த நேரத்திலும் சிகிச்சையளிக்கக்கூடிய வகையில் சுகாதாரப் பொறிமுறை உருவாக்கப்பட்டுள்ளது. அமெரிக்கா, ஸ்பெனியில் உள்ளிட்ட நாடுகளுடன் ஒப்பிடுகையில் இலங்கையில் நாளாந்த பாதிப்பு மற்றும் பலி எண்ணிக்கை குறைந்த மட்டத்திலேயே இருக்கின்றது. வைரஸ் பரவுவதைத் தடுப்பதற்கு முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கைகளே இதற்குக் காரணமாகும்.

அதேவேளை, ஏற்றுமதி வர்த்தகம், சுற்றுலாத்துறை ஆகியன பாதிக்கப்பட்டுள்ளதால் எதிர்காலத்தில் பொருளாதார ரீதியில் பல பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்கவேண்டிய நிலை ஏற்படும். ரூபாவின் பெறுமதியும் வீழ்ச்சி கண்டுள்ளது. எனவே, புதிய வழிமுறைகளைத் தேடவேண்டும்.

ஜனநாயக பக்கமும் கவனம் செலுத்த வேண்டும். ஏப்ரல் 25 பொதுத்தேர்தல் நடைபெறவிருந்தது. எனினும், தற்போதைய சூழ்நிலையில் அது ஒத்திவைக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் நாடாளுமன்றம் தேவையில்லை, 20, 25 மேஜர் ஜெனரல்களும், பிரிகேடியர்களும் இருந்தால் நாட்டை ஆளலாம். பொதுத்தேர்தல் தேவையில்லை என சமூகவலைத்தளங்களில் கருத்துகள் வெளியிடப்பட்டுவருன்றன. ஆனால், ஜனநாயகத்தை மதிக்கும் நாடு என்ற அடிப்படையில் எம்மால் நாடாளுமன்ற சம்பிரதாயத்தை மீறிச் செய்யமுடியாது.

எனவே, கொரோனாவைக் கட்டுப்படுத்துவதற்காக தேசிய வேலைத்திட்டம், நிவாரணத் திட்டம், பொருளாதாரத்தை மீட்டெடுத்தல், ஜனநாயகத்தைப் பலப்படுத்தல் போன்ற காரணிகள் தொடர்பிலும் அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களும் கவனம் செலுத்த வேண்டும்- என்றார்.(க-44)



ஊரடங்கு நேரத்தில்

# கஞ்சா விற்பனை; இருவர் கைது!

கொழும்பு, ஏப்.9

ஊரடங்கு வேளையிலும் கேரள கஞ்சா விற்பனையில் ஈடுபட்டனர் என்ற குற்றச்சாட்டில் இருவரைப் பொகவந்தலாவ பொலிஸார் நேற்று இரவு கைது செய்தனர்.

ஊரடங்குச்சட்டம் அமுலில் இருந்த வேளை பொகவந்தலாவ நகரப்பகுதியில் சந்தேகத்துக்கு இடமான முறையில் சுற்றித்திரிந்த ஐந்து நபர்களை பொலிஸார் சோதனை செய்தனர். இதன்போது இருவரிடமிருந்து 20 பக்கெட் கேரளா கஞ்சா மீட்கப்பட்டன.

ஏனைய மூவரும் ஊரடங்கு சட்டத்தை மீறிய குற்றச்சாட்டின் அடிப்படையில் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்டவர்கள் லொய்னோன் மற்றும் கிலானி தோட்டப் பகுதிகளை சேர்ந்தவர்கள் என்று பொகவந்தலாவ பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சாந்த பண்டார தெரிவித்தார். (ஐ-44)

# வடக்கில் உஷ்ணம்!

கொழும்பு, ஏப். 9

வடக்கில் இன்று வெப்பமான காலநிலை நிலவியது. இந்தக் காலநிலை நீடிக்கும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

வடக்கு மாகாணத்துடன், வடமேல் மற்றும் வடமத்திய மாகாணங்களிலும் வெப்பமான காலநிலை நிலவும் என்று கூறப்படுகின்றது. (ஒ,5)

# சாரதிகள், நடத்துநர்களுக்கும் 5 ஆயிரம் ரூபா

கொழும்பு, ஏப். 9

நாட்டில் கொரோனா பரம்பலைக் கட்டுப்படுத்த முன்னெடுக்கப்படும் கட்டுப்பாடுகள் காரணமாக தொழிலை இழந்துள்ள தனியார் பேருந்துச் சாரதிகள் மற்றும் நடத்துநர்களுக்கு 5 ஆயிரம் ரூபாக் கொடுப்பனவு வழங்கப்படும் என்று போக்குவரத்து முகாமைத்துவ அமைச்சு அறிவித்துள்ளது.

இதேவேளை, வடக்கு மாகாணத்தில் கடமையாற்றும் 3 ஆயிரத்து 200 முன்பள்ளி ஆசிரியர்களுக்கு 5 ஆயிரம் ரூபாக் கொடுப்பனவைப் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அறிய முடிகின்றது. (ஒ,5)

# தியத்தலாவ நிலையத்தில் 67 பேர் தனிமைப்படுத்தலில்

கொழும்பு, ஏப். 9

கொரோனாத் தொற்றுச் சந்தேகத்தில், இரத்தினபுரி முந்துவ மற்றும் பெல்மடுல்ல ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த 67 பேர் தியத்தலாவ தனிமைப்படுத்தல் கண்காணிப்பு நிலையத்தில் இன்று இணைக்கப்பட்டுள்ளனர்.

குறித்த 67 பேரும் 21 தினங்கள் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்படுவரென்று இராணுவத்தினர் தெரிவித்துள்ளனர். இரத்தினபுரியில் இருவர் கொரோனாத் தொற்றுக்கு உள்ளாகியுள்ளனர். இதனையடுத்தே அந்த 67 பேரையும் தனிமைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (த-114)





# யாழ்.போதனாவுக்கு ஒரு தொகை நிதியுதவி

யாழ்ப்பாணம்,ஏப்.9

வடக்கு மாகாண பொறியியலாளர்கள் அமைப்பு யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு நிதியுதவி வழங்கியுள்ளது.

கொரோனோ வைரஸ் தொற்று அதிகரித்து வருகின்ற நிலையில் அதனைக் கட்டப்படுத்துவதற்கு யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.

இதற்கென பல தனிநபர்கள், பொது அமைப்புக்கள் உட்பட பல்வேறு நிறுவனங்கள் மருத்துவமனைக்கு உதவிகளை வழங்கி வருகின்றனர். இந்த நிலையிலேயே பொறியியலாளர் அமைப்பும் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைப் பணிப்பாளரிடம் ஒரு தொகுதி நிதியை வழங்கியுள்ளது. (ஐ-20)

# காளி அம்பாள் கோவிலூடாக 400 குடும்பங்களுக்கு உதவி

சாவகச்சேரி, ஏப். 9

சாவகச்சேரி சரசாலை இலந்தைத்திடல் ஸ்ரீவீ ரமா காளி அம்பாள் கோவில் நிர்வாகத்தினர் கடந்த ஆறு தினங்களில் சரசாலையில் வதியும் பொருளாதார நிலையில் பின்தங்கிய குடும் பங்களைச் சேர்ந்த 400 குடும்பங்களுக்கு அத்தியாவசிய உணவுப் பொருள்களை வழங் கியுள்ளனர்.

அன்பர்கள் வழங்கிய நிதி மூலம் கோவில் அறப்பணி நிதியத்தினர் மிகவும் கஷ்டமான குடும்பங்களுக்கு உதவிப் பொருள்களை வழங்கியுள்ளனர். கோவிலில் இந்த வருடம் நடைபெறவிருந்த மணவாளக்கோல சங்காபி சேகத்துக்கெனச் சேர்த்த நிதியை , நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை காரணமாக பாதிக்கப்பட்ட குடும்பங்க ளுக்கு அத்தியா வசிய உணவுப் பொருள்களை வழங்கியமை சமூகத்தளங்களில் பெரும் வரவேற்பைப்பெற் றிருந்தது. இந்த நிலையில், உபகாரிகள் பலர் நிதித் தேவையை இனங்கண்டு தாமாக நிதி வழங்கி வருகின்றனர்.

அவ்வாறு கிடைத்த நிதியில் மிகவறிய நிலை யில் காணப்பட்ட 400 குடும்பங்களுக்கு உதவி வழங்கியுள்ளனர். கொரோனா வைரஸ் காரணமாக தனிமைப்படுத்தப்பட்ட குடும் பங்களின் தேவைகளையும் கோவில் நிர்வா கத்தினர் நிறைவேற்றினர். அத்துடன் சரசா லைப் பிரதேசத்தில் வதியும் வறிய குடும்பங்க ளைச் சேர்ந்த பாலூட்டும் தாய்மாரின் வேண்டுகோளுக்கு இணங்க ஆறு மாதத்துக் கும் இரண்டு வயதுக்கும் இடைப்பட்ட 15 குழந்தைகளுக்கு இரு வாரங்களுக்குத் தேவை யான பால்மா பைகளையும் பிரசவத்தை எதிர் நோக்கியுள்ள கரப்பவதிகளுக்கு பிரசவத் தின் போது பயன்படுத்தும் சுகாதாரப் பொதிகளை யும் கோவில் நிர்வாகத்தினர் வழங்கினர். (த-9)

# தண்டப் பணத்துக்கு நிவாரண காலம்

### தபால்மா அதிபர் அறிவிப்பு

கொழும்பு, ஏப். 9

வாகனங்களுக்கான தண்டப் பணத்தை தபால் அலுவலகங்கள் மூலம் செலுத்துவதற்கான நிவா ரண காலத்தை இலங்கைத் தபால் திணைக்களம் அறிவித்துள்ளது. இதனைச் செலுத்துவதில் ஏற்ப டும் தாமதத்துக்கான மேலதிக தண்டப்பணமும் தற்காலிகமாக அகற்றப்பட்டுள்ளது.

இது தொடர்பில் தபால் திணைக்களம் வெளியிட் டுள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள தாவது:

பொலிஸாரினால் 2020ஆம் ஆண்டு மார்ச் மாதம் 1ஆம் திகதி அல்லது அதன் பின்னர் வழங்கப்பட் டுள்ள உள்ளூர் வாகன தண்டப்பண ஆவணம், 14 நாள்கள் கடந்தமை தொடர்பில் எந்தவித மேல திக தண்டப்பணத்தையும் அறவிடாமல் செலுத்து வதற்காக, பொதுவான கடமைகளுக்காக தபால் மற்றும் உப தபால் அலுவலகங்கள் திறக்கப்பட்ட பின்னர் நிவாரண காலத்தை வழங்குவதற்கு இலங்கை தபால் திணைக்களத்தால் பொலிஸ் திணைக்களத்தில் உடன்பாட்டு எட்டப்பட்ட தற்கு அமைவாக நடவடிக்கை மேற்கொள்ளப்ப டும், என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (ஒ,5)



# கொத்தமல்லி, இஞ்சி, மரமஞ்சள் இறக்குமதி செய்ய தீர்மானம்

கொழும்பு, ஏப். 9

கொத்தமல்லி, இஞ்சி மற்றும் மரமஞ்சளை இறக்குமதி செய்வதற்குத் தீர்மானிக்கப் பட்டுள்ளது.

அத்தியாவசிய சேவைகள் தொடர்பான ஜனாதிபதியின் விசேட செயலணியின் கூட் டத்திலேயே மேற்படி முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

செயலணியின் தலைவர் பசில் ராஜபக்ஸ தலைமை யில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் சுகாதார அமைச் சர் பவித்ரா வன்னியாராச்சி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். (ஒ,5)



# அவசர உதவிகளுக்கென பச்லைப்பள்ளியில் குழு

கிளிநொச்சி, ஏப்.9

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள கொரோனாத் தாக்கம் காரணமாக மக்கள் அனைவரும் பாதிக்கப்பட்டுள்ளனர். அவ்வாறு பாதிக்கப்பட்ட பச்சிலைப்பள்ளிப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட மக்களுக்குத் தேவையான அவ சர உதவிகளை மேற்கொள்ளவென அந்தப் பிரதேச செயல கத்தால் குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது.

இந்த முன்மாதிரியான செயற்பாட்டை பச்சிலைப்பள்ளி பிதேச செயலாளர் ப.ஜெயராணி மேற்கொண்டுள்ளார். இதன் பிரதான நோக்கமாக இன்றைய இக்கட்டான சூழ்நிலையில் வினைத்திறனாக அத்தியாவசிய சேவைகளை ஒழுங்மைப்பதும் நிவாரணங்களை வழங்குதலுமாகும் என பிரதே செயலர் தெரிவித்துள்ளார். அந்த வகையில் பச் லைப்பள்ளி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பகுதிக ளில் அவசர உணவுத் தேவைக்காக உதவிப் பிரதேச செய லர் நியமிக்கப்பட்டுள்ளார். உணவுத் தேவைகள் தொடர் பில் 0766843536 என்ற அவரின் அலைபேசி இலக்கத்து டன் தொடர்புகொள்ள முடியும், மருந்துகளின் தேவைக் காக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் ம.மாலதி நியமிக்கப்பட்டுள்ளார். மருந்துத் தேவைகளுக்கு 0771992461 என்ற அவரின் அலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளமுடியும், போக்குவரத்துக்காக நிர்வாக உத்தியோகத்தரான சி.சயந்தினி நியமிக்கப்பட்டுள்ளார் அதற்கு 0770458662 என்ற அவரின் அலைபேசி இலக்கத்து டன் தொடர்புகொள்ள முடியும், குடிதண்ணீருக்கு அபிவி ருத்தி உத்தியோகத்தரான வி.வஜயரூபன் நியமிக்கப்பட் டுள்ளார் அதற்கு 0776150596 என்ற அவரின் அலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளமுடியும், சமூகசேவைக் காக சமூகசேவை உத்தியோகத்தரான க.ஜெயானந்தராசா நியமிக்கப்பட்டுள்ளார். அதற்கு 0778692493 என்ற அவரின் அலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ள முடியும், சமுர்த்தி அலுவல்களுக்கு சமுர்த்தி முகாமையாளரான வி.தர்சிகா நியமிக்கப்பட்டுள்ளார். சமுர்த்தி தொடர்பான தேவைகளுக்கு 0776189644 என்ற அவரின் அலைபேசி இலக் கத்துடன் தொடர்புகொண்டு சேவைகளைப் பெற்றுக்கொள்ள முடியும் என்று பிரதேச செயலர் தெரிவித்துள்ளார். (ப)

# 2000 க்கும் அதிகமானோர் சுயதனிமைப்படுத்தலில்

திருகோணமலை, ஏப். 9

திருகோணமலை மாவட்டத்தில் இது வரை வெளிநாடுகளிலிருந்து வருகை தந்த 744 பேரும் உள்நாட்டில் பிற மாவட்டங்களிலிருந்து வருகை தந்த ஆயிரத்து 452 பேரும் சுய தனிமைப்ப டுத்தலில் உள்ளனர் என்று தெரிவிக்கப் பட்டது. அத்தோடு வெளிநாடுகளிலி ருந்த வந்த 676 பேரினதும் உள்நாட்டி லிருந்து வந்த 656 பேரினதும் சுய தனி மைப்படுத்தல் செயற்பாடு பூர்த்திய டைந்துள்ளது என்று திருகோணமலை மாவட்டச் செயலர் தெரிவித்தார்.

ஜே.எஸ்.டி.எம்.அசங்க அபேவர்தன தெரிவித்துள்ளார். அத்துடன் 10 சந்தே கத்துக்கிடமான நபர்கள் அடையாளம் காணப்பட்டு உரிய மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டனர். அவர்களுக்கு தொற்று இல்லை என்று ஊர்ஜிதம் செய்யப்பட்டுள்ளது.

திருகோணமலை மாவட்டம் கொரோனா தொற்றிலிருந்து பாதுகாப்பாக உள்ளது. தொடராக இதனைப் பேண அனைவரும் பொறுப்புடன் செயற் பட வேண்டும் என்றும் மாவட்டச் செயலர் வேண்டிக்கொண்டார். (த-114)

# விசேட மருத்துவமனைகள் தயார் நிலையில்

கொழும்பு, ஏப் 10

நாட்டில் கொரோனாத் தொற்று அதிகரித்து வரும் நிலையில் கொரோனா நோய்த் தொற்றுக்குள்ளாகி இருக்கலாம் எனச் சந்தேகிக் கப்படுபவர்களுக்கு சிகிச்சை வழங்குவதற்கு, கொழும்பு, கம்பஹா, களுத்துறை மற்றும் புத்தளம் ஆகிய மாவட்டங்க ளில் 4 விசேட வைத்தியசாலை கள் தயார்படுத்தப்பட்டுள்ள தாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் வைத்தி யர் அனில் ஜாசிங்க தெரிவித் துள்ளார். அபாய வலயங்க ளாகப் பிரகட னப்படுத்தப் பட்டுள்ள குறித்த 4 மாவட் டங்களில், கொரோனாத் தொற்றாளர்களும் நோய் அறி குறிகளுடன் இனங்காணப்ப டுவோரின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ள நிலையில் அவர் களைப் பரிசோதிக்கவும், சிகிச்சையளிக்கவும் இந்த வைத்தி யசாலைகளைப் பயன்படுத்த வுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (ந-114)







# விளைச்சலோ அமோகம் விற்பனையில்லையே!

## விவசாயிகள் கவலை

நுவரெலியா,ஏப்.9

நுவரெலியா மாவட்ட விவசாயிகள் தமது பயிர்கள் மூலம் அமோக விளைச்சலைப் பெற்றுக் கொண்டாலும், அவற்றை விற்பனை செய்ய முடியாது பல்வேறு இன்னல்களை எதிர்நோக்கி வருவதாக கவலை தெரிவித்தனர்.

நாட்டிலுள்ள பொருளாதார மத்திய நிலையங்கள் மூடப்பட்டுள்ளதாலும், ஊரடங்குச் சட்டம் அமுலில் இருப்பதாலும் மொத்த வியாபாரிகள் தமது பகுதிகளுக்கு வருவதில்லை என்றும்,இதனால் மரக்கறி வகைகளை விற்பனை செய்ய முடியாமல் இருப்பதாகவும் விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

தற்போது அறுவடை செய்யப்பட்ட மரக்கறிகள் பழுதடைய ஆரம்பித்துள்ளன. இதனை தமக்கு சாதகமாக பயன்படுத்திக்கொள்ளும் சில வியாபாரிகள்,குறைந்த விலைக்கு அறுவடை செய்யப்பட்ட மரக்கறிகளை வாங்கி வருகின்றனர் என்றும் கவலை தெரிவித்தனர். இது தொடர்பில் மலையக மக்கள் முன்னணியின் தலைவரும், முன்னாள் இராஜாங்க அமைச்சருமான ராதாகிருஷ்ணன் கருத்து தெரிவிக்கையில்,

“அரசால் முன்னெடுக்கப்படும் இந்த வேலைத்திட்டம் குறித்து திருப்திகொள்ள முடியாது. சிறு வியாபாரிகள் பொருளாதார மத்திய நிலையங்களுக்கு வந்து, மரக்கறி வகைகளை கொள்வனவு செய்யமுடியாத நிலை ஏற்படும். ஒரு புறத்தில் விவசாயிகளும், மறுபுறத்தில் விற்பனையாளர்களும் பாதிக்கப்பட்டுள்ளனர். இதனால் எதிர்காலத்தில் அரசாங்கம் பாரிய பிரச்சினைக்கு முகங்கொடுக்கவேண்டிவரும்.

மரக்கறி விவசாயிகள் மரக்கறி வகைகளை குழிதோண்டிப் புதைக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. எனவே, அரசாங்கம் தலையிட்டு தீர்வை பெற்று தர வேண்டும். ‘ என்றார். (ஐ-40)

# மினி சூறாவளியால் 46 வீடுகள் சேதம் 157 பேர் பாதிப்பு

வவுனியா, ஏப். 9

வவுனியாவில் மினி சூறாவளி காரணமாக நேற்று 46 வீடுகள் சேதமடைந்துள்ளன. 47 குடும்பங்களைச் சேர்ந்த 157 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

வவுனியாவில் கடந்த சில நாள்களாக வெப்பமான காலநிலை நிலவிவந்திருந்தது. இரு நாள்களாக இடி மின்னலுடன் கூடிய மழை பெய்துவருகின்றது. இந்த நிலையில் வவுனியா சுந்தரபுரம், மணிபுரம், சூடுவெந்தபுலவு, நாகர் இலுப்பைக்குளம் பகுதிகளில் நேற்று வீசிய மினி சூறாவளியால் 46 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்தன. 47 குடும்பங்களைச் சேர்ந்த 157 பேர் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர். ஆயிரத்துக்கும் மேற்பட்ட பப்பாசி மரங்கள் அழிவடைந்துள்ளன. இதேவேளை, வவுனியா சுந்தரபுரம் சரஸ்வதி வித்தியாலய பிரதான கட்டடங்களும் சேதமடைந்துள்ளன. (து-110)





# கிளிநொச்சி நபர் கொரோனாவால் லண்டனில் சாவு

கிளிநொச்சி, ஏப். 9

பூநகரியைச் சேர்ந்தவரும் லண்டனில் வசிப்பவருமான ஊடகவியலாளர் தில்லைநாதன் ஆனந்தவர்ணன் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டு இன்று உயிரிழந்துள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது. இவர் பூநகரி கல்விக்கோட்டத்தின் முன்னாள் பணிப்பாளர் தில்லைநாதனின் மகன் என்று தெரிவிக்கப்பட்டது. ரி.ரி.என் தொலைக்காட்சியின் செய்தி ஆசிரியராகவும் நிகழ்ச்சித் தொகுப்பாளராகவும் திகழ்ந்தவர் என்று தெரிவிக்கப்பட்டது. பூநகரி பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினராகவும் அவர் செயற்பட்டிருந்தார். (து)

# ஊரடங்கிலும் சங்கக் கடைகளை திறக்க அனுமதி

கொழும்பு, ஏப். 9

ஊரடங்குச் சட்டம் நடைமுறையிலுள்ள நேரம் சதோசவைப் போன்று கூட்டுறவு சங்கங்களும் பொருள்களை விற்க அனுமதியளிக்க அமைச்சரவை தீர்மானித்துள்ளது.

ஜனாதிபதி தலைமையில் கூடிய அமைச்சரவை இப்போதைய கொரோனா வைரஸ் நிலைமைகள் குறித்து ஆராய்ந்து கொரோனா தொற்றுக்குள்ளான சந்தேகத்தில் தனிமைப்படுத்தப்படுத்தி வைக்கப்படுவோருக்கும் கொரோனா பரிசோதனை களை செய்ய அமைச்சரவை முடிவு செய்துள்ளது.

வெளிநாட்டு விமான நிலையங்களில் சிக்கியுள்ள 32 பேரை உடனடியாக இலங்கை கொண்டுவர அமைச்சரவை தீர்மானித்தது. அவர்கள் நாடு திரும்பியதும் அவர்கள் தனிமைப்படுத்தல் முகாமுக்கு அனுப்பி வைக்கப்படுவர். இந்தியா இலங்கைக்கு உடனடியாக அனுப்பிய மருந்துப் பொருள்ள் தொடர்பில் அமைச்ச ரவை ஏகமனதாக பாராட்டை தெரிவித்தது. (ஒ,5)

# 23 போதைவஸ்து பாவனையாளர்கள் இராணுவத்தால் தனிமைப்படுத்தல்!

கொழும்பு, ஏப்.9

ஜா எல பமுனுகம பகுதியில் போதைவஸ்துப் பாவனையாளர்கள் என அடையாளம் காணப்பட்ட 23 பேரை இராணுவம் தனிமைப்படுத்தியுள்ளது. கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளான போதைவஸ்துப் பாவனையாளர் ஒருவருடன் நெருக்கமாகப் பழகினார்கள் என்ற அடிப்படையிலேயே அவர்கள் தனிமைப்படுத்தப்பட்டனர்.

தனிமைப்படுத்தப்பட்டபோதும் போதைவஸ்துப் பாவனைக்காக அவர்கள் வீடுகளில் இருந்து வெளியே செல்வதால் அவர்களை ஒரே இடத்தில் தங்கவைப்பதற்காக நீர்கொழும்பில் உள்ள தேவாலய வளவு ஒன்று தெரிவு செய்யப்பட்டு அந்த 23 பேரும் தனிமைப் படுத்தப்பட்டுள்ளனர். (ப-22)

இப்பத்திரிகை, யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அருண் பிறிண்டேர்ஸால் 09.04.2020 ஆம் திகதி வெளியிடப்பெற்றது.